# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, FAST TRACK MAHILA COURT, THANJAVUR.

**S.C. No 43 /2021**

**Prosecution PW - 9**

| | | | |
|---|---|---|---|
| Name | அருள்குமார் | Occupation | |
| Father's Name | | Village | |
| Age | | Taluk | |
| Date | 01.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

**(Accused present )**

**முதல் விசாரணை**

நான் தற்போது சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 01.06.2020 அதிகாலை 12.30 மணிக்கு பேராவூரணி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ஆவணம் பூசாரி தெருவை சேர்ந்த ராமலிங்கம் மனைவி பானுமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுக்க எழுத்து மூலமாக புகாரை பெற்று அந்நிலைய குற்ற எண் 780 / 2020 இதச 302 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ8 ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பித்தேன் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

காவல் நிலையத்திற்கு வரும் போதே புகார்தாரர் புகாரை எழுதிக் கொண்டு வந்தாரா அல்லது அங்கு வந்து எழுதினாரா என்றால் எழுதி தான் கொண்டு வந்தார். புகாரைப் பெற்ற போது புகார் தாரர்களுக்கு எழுத படிக்க தெரியுமா என கேட்டு விசாரித்தேனா என்றால் இல்லை. எங்கள் காவல் நிலையத்திலிருந்து பட்டுக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சுமார் எத்தனை தொலைவு என்றால் 26 கிலோ மீட்டர் இரண்டு சக்கர வாகனத்தில் சென்றால் சுமார் அரை மணி நேரத்தில் சென்றடையலாம் என்றால் சரிதான். நான் பதிவு செய்ததாகச் சொல்லும் முதல் தகவல் அறிக்கை 01.06.2020 அதிகாலை 12 30 மணிக்கு என்றால் சரிதான். இந்த முதல் தகவல் அறிக்கை நடுவர் நீதிமன்றத்திற்கு 01.06.2020 அன்று பிற்பகல் 12 55 மணிக்கு தான் சென்றடைந்துள்ளது என்றால் சரிதான். அதிகாலை பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நண்பகல்

நடுவர் நீதிமன்றத்திற்கு சென்றடைந்ததற்கு சிறப்பு காரணம் எதுவும் காலதாமதத்திற்கு உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. முதல் தகவல் அறிக்கை காலம் 15 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் புகார் பானுமதி இடம் இருந்து இந்த புகார் பெறப்படவில்லை அதன் தொடர்ச்சியாக இந்த முதல் தகவல் அறிக்கை பதியப்படவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் நேரத்திற்கு முன்பாகவே புகார் பெறப்பட்டது என்றும் எங்கள் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் பின்னிட்டு நேரம் குறிப்பிட்டு முன் வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.31.05. 2020. தனக்கு பயமாக இருப்பதாகவும் மகள் அழைத்ததால் மாலை 4 மணிக்கு மகள் வீட்டிற்கு சென்றதாக அ.சா.1 பானுமதி புகாரில் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம்.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஓம்/- **A.** தீபா,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.